**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 457/2013 P.W. /L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு.வினுக்குமார் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. கேசரி | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.09.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். புகார்தாரர் உஷா என்னுடைய அக்கா. எனது அக்காவை 18.04.2010ம் வருடம் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு திருமணம் செய்துக்கொடுத்தோம். வரதட்சணையாக ரூபாய் 1 இலட்சம் மற்றும் திருமண நிச்சயதார்த்திற்கு 1வது குற்றம்சுமத்தப்பட்ட நபருக்கு 3 1/4 பவுன் செயின்போட்டோம். அவர்கள் எனது அக்காவிற்கு முக்கால் பவுன் வளையல் ஒன்று போட்டார்கள். திருமணத்தின் போது 14பவுன் தங்க நகை எனது அக்காவிற்கு போட்டோம்.

2. சீர்வரிசைப்பொருட்கள் ரூபாய் 50 ஆயிரத்திற்கு கொடுத்தோம். 15 நாட்கள் கழித்து 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் வெளிநாடு செல்லவேண்டுமென்று 1 இலட்சம் ரூபாய் பணம் கேட்டுள்ளார். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எனது அக்காவை பணம் கேட்டு கொடுமைப்படுத்தினார்கள். இதை எனது அக்கா என்னிடம் கூறினார். நாங்கள் 1 இலட்சம் ரூபாய் பணம் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்குக் கொடுத்தோம்.

3. வெளிநாட்டிலிருந்து 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஊருக்கு வந்தவுடன் மறுபடியும் எனது அக்காவிடம் பிரச்சினை செய்து அவர் வேண்டாம் என்று கூறினார்.

அதன்பிறகு நாங்கள் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

நான் என் அக்கா வீட்டில் வாழவில்லை என்று சொன்னால் சரிதான். நான் முதல்விசாரணை சாட்சியத்தில் சொன்னவை என் அக்கா சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது அக்காவிற்கும் இறந்துபோன 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் சட்டப்படி விவாகரத்து ஆகவில்லை. ஆனால் நாங்கள் அதற்கு முன்னர் எங்கள் அக்காவிற்கு திருமணம் செய்து வைத்துவிட்டோம் என்றால் சரிதான்.

2. என் மீதும், என் அக்கா மீதும், என் அம்மா மீதும் இறந்துபோன 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் கருங்கல் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தார் என்றால்எனக்கு ஞாபகமில்லை. நான் ஞாபகமில்லை என்று உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அக்கா குளச்சல் அனைத்துமகளிர் காவல்நிலையத்தில் புகார் மனுக்கொடுத்த விவரம் எனக்குத் தெரியும். கொடுமைப்படுத்தியதற்காக கொடுத்தார்கள். எங்களை மேற்படி காவல்நிலையத்தில் சேர்த்து வைத்து விசாரித்தார்களா என்றால் ஞாபகமில்லை.

3. மேற்படி புகார்மனு எப்படி முடிக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. எனக்கு எல்லா சங்கதியும் ஞாபகம் உள்ளது என்றும் காவல்நிலையத்தில் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து போவதாகவும் உரிய நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெற்றுக்கொள்வோம் என்று எழுதிக்கொடுத்தோம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் ஞாபகமில்லை என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதியாததால் நாகர்கோவில் நீதிமன்றத்தில் என் அக்கா வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஞாபகமில்லை. என் அக்காவும் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபரும் திருமணத்திற்கு பிறகு எத்தனை நாட்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் அக்காவின் திருமணத்திற்கு பிறகு 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் வெளிநாடு சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

5. நான், எனது அம்மா, எனது அக்கா ஹேமா, அவரது கணவர் ஆகியோர்கள் சேர்ந்து திருவனந்தபுரம் விமான நிலையத்திலிருந்து அவரை வெளிநாட்டிற்கு அனுப்பிய ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. தற்சமயம் அவர் வெளிநாட்டில் தான் இருக்கிறாரா அல்லது எங்கிருக்கிறார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை.

நான் எந்த சம்பவத்தையும் கேள்விபடவும் இல்லை என்றும் நான் நேரடியாக எந்த சம்பவத்திற்கும் சாட்சி இல்லை என்றாலும், மேற்படி திருமணத்திற்கு பிறகு 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் வெளிநாடு சென்ற காலகட்டத்தில் வழக்கில் எங்கள் குடும்பத்தில் உள்ள நபர்கள் சாட்சியாக போட்டுள்ளவர்கள் சேர்ந்து என்

அக்காவிற்கு வேறு ஒரு திருமணம் செய்து வைத்துவிட்டோம் என்றால் சரிதான். அந்த திருமணத்தில் இருந்து எங்களை காப்பாற்றிக்கொள்ள வேண்டி உண்மைக்கு மாறான சங்கதிகளுடன் இந்த புகாரானது தாக்கல் செய்யப்பட்டு அதுவும் குளச்சல் காவல்நிலையத்தில் நிராகரிக்கப்பட்டு நாங்கள் தப்புவதற்காக நீதிமன்றம் மூலமாக உண்மைக்கு மாறான இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.